DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 08/2022 Crime No. 348/2020 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-10- திரு.விஸ்வநாதன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 27.11.2024 |

**எதிரி ஆஜர்**

முதல் விசாரணை

நான் தற்பொழுது சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 11.10.2020 ம் தேதியன்று நிலைய தலைமை காவலர் திரு.காசிலிங்கம் என்பவர் நிலைய குற்ற எண். 348/2020, இதச 294(b). 323, 506(i), 420 மற்றும் 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்று அன்றைய தினம் 21.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான இந்திராணி மற்றும் அமுதா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் இந்திராணி மற்றும் அமுதா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை நிலைய உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் அவர்களிடம் ஒப்புவித்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 08/2022 Crime No. 348/2020 Station Appakodal

| Name | PW-9- திரு.காசிலிங்கம் | Village | |
|---|---|---|---|
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 27.11.2024 |

**எதிரி ஆஜர்**

முதல் விசாரணை

நான் தற்பொழுது சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துபோது கடந்த 11.10.2020 ம் தேதியன்று நான் நிலைய அலுவலிலிருந்தபோது பவானி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற கூத்தம்பூண்டியை சேர்ந்த செல்வம் மனைவி சுமதி என்பவரது அசால்ட் இன்டிமேசனை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சுமதியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 20.00 மணிக்கு நிலைய குற்ற எண். 348/2020, இதச 294(b). 323, 506(i), 420 மற்றும் 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் வாக்குமூலத்தையும் மாண்பமை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை புலன் விசாரணைக்காக உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.**

இவ்வழக்கில் ஒரு நாள் காலதாமாகத்தான் முதல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், மருத்துவமனையிலிருந்து இன்டிமேசன் காலதாமதாக கிடைக்கப்பெற்றது. புகார்தார் அளித்த புகார் வாக்குமூலத்தில் எந்தெந்த தேதியில் பணம் கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். மேலும் புகார் வாக்குமூலத்தில் எந்த தேதியில் எந்த வருடம் வேலை வாங்கி தருவதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். புகார் வாக்குமூலத்தில் தனக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால், சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால், சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 08/2022 Crime No. 348/2020 Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW-8-திருமதி.வசந்த மஞ்சு | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 27.11.2024 |

**எதிரி ஆஜர்**

முதல் விசாரணை

நான் தற்பொழுது பவானி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.10.2020 ம் தேதியன்று, பகல் சுமார் 11.10 மணிக்கு, நான் மேற்படி மருத்துவமனையில் பணியிலிருந்தபொழுது கூத்தம்பூண்டியை சேர்ந்த செல்வம் மனைவி சுமதி என்பவர் மருத்துவமனைக்கு வந்து தன்னை அடையாளம் தெரிந்த நபர் கையால் அடித்துவிட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்தார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1) வலது தோள்பட்டையில் கன்றிய காயம் காணப்பட்டது.

2) வலது தோள்பட்டையை அசைக்க முடியாத அளவிற்கு வலி இருப்பதாக தெரிவித்தார்.

மேற்கூறிய 1 மற்றும் 2 காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். விபத்து பதிவேடு அ.,சா.ஆ.6 மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி.எதிரி தரப்பில் கு.வி.**

நான் சிகிச்சை அளித்த நபர் கன்னம் மற்றும் இடுப்பு பகுதியில் காயம் இருந்ததாக சொல்லவில்லை என்றால், சரிதான். நான் மேற்சொன்ன இரண்டு காயங்கள் ஒரு நபர் கீழே விழும்பொழுது ஏற்படும் என்றால், சரிதான்.